2010 ஏப்ரல் 19]

## 3. தீரன் சின்னமலை பிறந்த நாளை அரசு விழாவாக அறிவித்தமைக்கு நன்றியுரை

**திரு. சி. ஞானசேகரன்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

**திரு. தி. வேல்முருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

**திரு. விடியல் எஸ். சேகர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. விடியல் எஸ். சேகர், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இப்போது நான் ஒரு* issue-*வை எடுக்கப்போகிறேன். (குறுக்கீடுகள்) திரு. விடியல் எஸ். சேகர், சொல்லுங்கள்.*

**திரு. விடியல் எஸ். சேகர்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்குவள நாட்டினுடைய முதல் விடுதலைப் போராட்ட வீரன், தீரன் சின்னமலை அவர்களுடைய பிறந்த நாளான 17-4-2010 தினத்தை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் இதே அவையிலே, அமைச்சர்கள் மூலமாக, நமது மாண்புமிகு அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள், அருமை அண்ணன், திரு. சி. ஞானசேகரன் அவர்கள், அருமை அண்ணன்* R.M.P. *அவர்கள், திரு. எம்.ஆர். சுந்தரம் அவர்கள், திரு. எல்.பி. தர்மலிங்கம் உள்ளிட்ட உறுப்பினர்கள் எல்லாம் கோரிக்கையாக வைத்தபோது அதை ஏற்று, 'பொன்னர் சங்கர்' வரலாற்றை எழுதியிருக்கின்ற வரலாற்று நாயகர், தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், அரசு விழாவாக அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அறிவித்ததோடு மட்டுமல்லாமல் நமது மரியாதைக்குரிய துணை முதல்வர் அவர்களை அங்கே அனுப்பிவைத்து அந்தத் தீரன் சின்னமலை அவர்களுக்கு மரியாதை செய்து, கொங்கு நாட்டு மக்களுடைய, கொங்கு சமுதாயத்தினுடைய மக்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைத்து, பெருமை சேர்த்திருக்கக்கூடிய டாக்டர் கலைஞர் அவர்கள், கொங்கு சமுதாயத்திற்கு மேலும் பெருமையை சேர்த்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே, கொங்குநாட்டு மக்களின் சார்பிலே நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)*